# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2019

| தரம் : 08 | புவியியல் | நேரம் : 2.00 மணித்தியாலம் |
|---|---|---|
| | சுட்டெண் : ........................................................................ | |

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

01. அதிக உபகோள்களினைக் கொண்ட கோள்
    1) செவ்வாய்
    2) வியாழன்
    3) புதன்
    4) வெள்ளி

02. பின்வருவனவற்றில் அகக்கோள் எது?
    1) வியாழன்
    2) சனி
    3) புதன்
    4) யுரெனஸ்

03. வடஅரைக் கோளத்தினையும், தென்னரைக் கோளத்தினையும் பிரிக்கும் கற்பனைக் கோடு
    1) மத்திய கோடு
    2) கீறின்விச்கோடு
    3) சர்வதேச திகதிக் கோடு
    4) ஆட்டிக்வட்டம்

04. கிறீன்விச் நகரம் காணப்படும் நாடு
    1) ஐக்கிய அமெரிக்கா
    2) ஐக்கியராச்சியம்
    3) ஐக்கிய அரபுராச்சியம்
    4) அயர்லாந்து

05. அண்மையில் விண்ணிற்கு ஏவப்பட்ட இலங்கைச் செய்மதியின் பெயர்
    1) லான்சாட் - 2
    2) அக்கினி - 1
    3) ராவணா - 1
    4) சீசாட் - 1

06. சிந்து நதிப்பள்ளத்தாக்கு காணப்படும் நாடு
    1) சீனா
    2) ஆப்கானிஸ்தான்
    3) பாக்கிஸ்தான்
    4) பங்களாதேஷ்

07. கங்கைநதியின் தாழ் நிலப்பகுதியின் பிரதான பயிர்
    1) தேயிலை
    2) சணல்
    3) கோதுமை
    4) கரும்பு

08. கரையோர நிலத்தோற்றத்தினைக் கொண்டிராத தென்னாசிய நாடு
    1) நேபாளம்
    2) இந்தியா
    3) பாகிஸ்தான்
    4) பங்களாதேஷ்

09. வளிமண்டலத்தில் அதிகளவு சதவீதத்தினைக் கொண்ட வாயு
    1) ஒட்சிசன்
    2) ஐதரசன்
    3) காபனீரொட்சைட்
    4) நைதரசன்

10. சூரியன் கடகக் கோட்டில் உச்சம் கொடுக்கும் காலம்
    1) யூன் - 21
    2) செப்டெம்பர் - 23
    3) டிசம்பர் - 22
    4) மார்ச் - 21

11. புவிச் சுழற்சி இடம்பெறுவது
    1) மேற்கிலிருந்து கிழக்காக
    2) கிழக்கிலிருந்து மேற்காக
    3) வடக்கிலிருந்து தெற்காக
    4) தெற்கிலிருந்து வடக்காக

kalvi.lk

12. சார்க் அமைப்பில் அங்கத்துவம் பெற்றிருக்கும் மத்திய ஆசிய நாடு
1) ஆப்கானிஸ்தான்
2) இந்தியா
3) பாகிஸ்தான்
4) இலங்கை

13. ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையத்தின் பெயர்
1) நாசா
2) நோவா
3) இஸ்ரோ
4) யூக்ஸா

14. உலகின் மிக உயரமான மலைச் சிகரம்
1) அன்னபூர்ணா
2) நந்தாதேவி
3) எவரெஸ்ட்
4) தவளகிரி

15. தென்னாசியப் பிரதேசத்தின் பிரதான காலநிலை வகை
1) துந்திராக் காலநிலை
2) அயனக் காலநிலை
3) இடைவெப்பக் காலநிலை
4) முனைவுக் காலநிலை

16. தென்னாசிய வலயத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய நாடு
1) இந்தியா
2) பாகிஸ்தான்
3) நேபாளம்
4) பங்காளதேஷ்

17. புவியின் விட்டத்தினை விட பத்து மடங்கு பெரிதான கோள்
1) சனி
2) வெள்ளி
3) வியாழன்
4) செவ்வாய்

18. நீல்ஆம்ஸ்ரோங்கின் தாய்நாடு
1) பிரித்தானியா
2) பிரான்ஸ்
3) ஐக்கிய அமெரிக்கா
4) ரஷ்யா

19. சாரதா, சாம்பல் கிளையாறுகளினைக் கொண்ட ஆற்று வடிநிலம்
1) சிந்து
2) மீகொங்
3) காவேரி
4) கங்கை

20. இந்தியாவின் இயற்கைத் துறைமுகமாக வளர்ச்சி பெற்ற துறைமுக நகர்
1) கொல்கத்தா
2) பூனே
3) மும்பாய்
4) விசாகப்பட்டிணம்

(20 × 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**முதலாம், இரண்டாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**01.** 1) இரண்டாம் தவணையில் புவியியல் பாடத்தில் நீர் செய்த கணிப்பீட்டினைத் தருக. (02 புள்ளிகள்)

2) நீர் மேற்கொண்ட கணிப்பீட்டின் பாட அலகினை எழுதுக. (02 புள்ளிகள்)


3) கணிப்பீட்டிற்கு பயன்படுத்திய இரு தரஉள்ளீட்டுப் பொருட்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

4) கணிப்பீட்டினை மேற்கொண்டதால் கிடைத்த மூன்று நன்மைகளினைத் தருக. (04 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන


kalvi.lk

02. படத்தில் குறிப்பிட்ட ஆங்கில எழுத்துக்களினை இனங்கண்டு தரப்பட்ட விடயங்களுக்கு பொருத்தமான எழுத்துக்களை அடைப்புக்குறிக்குள் எழுதுக.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) இமயமலை | (  ) | 2) மும்பாய் | (  ) | 3) மாலைதீவு | (  ) |
| 4) பாக்குநீரிணை | (  ) | 5) கொல்கத்தா | (  ) | 6) கங்கைநதி | (  ) |
| 7) சிந்துநதி | (  ) | 8) சுலைமான் மலை | (  ) | 9) புதுடில்லி | (  ) |
| 10) பூட்டான் | (  ) | 11) இஸ்லாமாபாத் | (  ) | 12) காபூல் | (  ) |

(12 புள்ளிகள்)



kalvi.lk

**03.** *1)* ஞாயிற்றுத் தொகுதிக்குரிய மூன்று வான்பொருட்களைத் தருக.

*2)* கோள்களுக்கும் உடுக்களுக்கும் இடையிலான வேறுபாட்டினைத் தருக.

*3)* சூரியனின் பிரதான மூன்று பண்புகளினைக் குறிப்பிடுக.

*4)* புவியின் மூன்று சிறப்பியல்புகளினைத் தருக. (12 புள்ளிகள்)

**04.** *1)* புவிச் சுழற்சி என்பது யாது?

*2)* புவிச் சுழற்சியினால் ஏற்படும் இரு விளைவுகளினைத் தருக.

*3)* புவியில் ஏற்படும் இரு பருவ காலங்களினைப் பெயரிடுக.

*4)* புவியின் பிரதான மூன்று அகலக் கோடுகளினைப் பெயரிடுக.

( 12 புள்ளிகள்)

**05.** *1)* வளிமண்டலத்தில் காணப்படும் பிரதான மூன்று வாயுக்களினைப் பெயரிடுக.

*2)* வளிமண்டலச் சேர்க்கையில் வாயு தவிர்ந்த மூன்று வேறு பொருட்களினைத் தருக.

*3)* வளிமண்டலத்தினால் ஏற்படும் மூன்று அனுகூலங்களினைத் தருக.

*4)* வளிமண்டலம் மாசடைவதற்குரிய மூன்று மானிட நடவடிக்கைகளினைக் குறிப்பிடுக.

( 12 புள்ளிகள்)

**06.** *1)* தென்னாசியாவில் தீவுகளாகக் காணப்படும் இரு நாடுகளினைத் தருக.

*2)* கரையோர நிலத்தோற்றத்தின் மூன்று பௌதிக அம்சங்களினை எழுதுக.

*3)* கரையோர நிலத்தோற்றத்தில் மேற்கொள்ளப்படும் இரு பிரதான பொருளாதார நடவடிக்கைகளினைக் குறிப்பிடுக.

*4)* கரையோர நிலத்தோற்றத்தின் மூன்று சூழல்தொகுதிகளினைப் பெயரிடுக.

( 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# SCIENCE

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**

850/= Monthly

**ENGLISH MEDIUM**

1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page